(c) The University will be considering the question of providing additional seats for the Pre-University Classes. The Government have sanctioned the opening of 7 new Pre-University Class Colleges in various centres during 1965–66.

* 417 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the details of the procedure laid down for admission of students to Pre-University Course in the Colleges, under the management of private agencies, and the Government;

(b) whether any standard other than eligibility in the S.S.L.C. Examination is prescribed; and

(c) whether the principle of communal representation to backward communities and Scheduled Castes and Tribes is observed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (c) A statement [a] is laid on the Table of the House.

Arts Colleges

* 418 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any representations have been received recently from the public of Tiruvannamalai, North Arcot district, for the opening of an Arts College there, from the academic year 1965–66; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

* 419 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Sri E. V. Ramasami (Leader of the Dravida Kazhagam) has made an offer of finance for opening a College at Tiruchirappalli; and

(b) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes; and

(b) Rs. 3,50,000 in cash and property known as "Lanka House" which comprises of one building and 9.65 acres of land valued at about Rs. 2 lakhs.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிக்குப் பெரியார் பெயரை வைக்க வேண்டும் என்கிற கோரிக்கை வந்து, அது மறுக்கப்பட்டு, அது மறுபடியும் பரிசீலனைக்கு வந்ததா ? அதன்பேரில் என்ன உத்தரவு போடப்பட்டிருக்கிறது ?

---

a Printed as Appendix IV on page 787.

10th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் 5½ லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். கணிசமான தொகை கொடுப்பவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்றால், அது வைக்கப் படுகிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இவருக்கு கல்லூரி நிர்வாகத்தில் பங்கு உண்டா என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

* 420 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள மீனாட்சி அரசினர் கல்லூரி நிதிக்காக அண்மையில் நடிகர்களின் கலா நிகழ்ச்சியும், கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மூலம் வசூலான தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes; and

(b) Variety Entertainment, Rs. 18,765.

Cricket Match, Rs. 63,430.

* 421 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் பெண்களுக்கென ஒரு தனிக் கலைக் கல்லூரி நிறுவ வேண்டும் என்று அவ்வூர் மக்கள் அண்மையில் முதல் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் ஏதேனும் கொடுத்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes; and

(b) It was decided that no Women's College at Pudukkottai need be opened since there is no immediate need for it.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி இல்லாததால், கலைக் கல்லூரியிலும் இடவசதி இல்லாததால், அடுத்த ஆண்டிலிருந்தாவது அங்கே ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதுக்கோட்டையில் ஒரு நிகழ்ச்சிக்கு நான் போயிருந்தபோதே அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெண்களுக்கு அப்படிக் கல்லூரி வேண்டுமென்றால், ஐந்து லட்ச ரூபாய் நன்கொடை வசூலித்துக் கொடுத்தால் யோசிக்கலாம் என்று அப்பொழுதே கூறியிருக்கிறேன்.